பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

28 06 2025 7 15

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று ஆச்சார்யா வித்யானந்த் மஹராஜின் நூற்றாண்டு விழாவை தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார்.

2. சீனாவுடனான எல்லைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண இந்தியா விரும்புவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. ஜம்மு-கஷ்மீரில் அமைந்துள்ள கிஷன் கங்கா மற்றும் **Ratle** நீர்மின் திட்டங்கள் தொடர்பாக நடுவர் மன்றும் வழங்கிய தீர்ப்பை இந்தியா நிராகரித்துள்ளது.

4. நேட்டோ விரிவாக்கம் தொடர்பாக மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு அளித்த உறுதிமொழியை மீறிவிட்டதாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் குற்றம் சாட்டியுள்ளார்.

5. ஆசிய ஸ்நூக்கர் குழு சாம்பியன் போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

*<<<<>>>>*

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று ஆச்சார்யா வித்யானந்த் மஹராஜின் நூற்றாண்டு விழாவை தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார்.

பகவான் மகாவீரர் அகிம்சை பாரதி அறக்கட்டளையுடன் இணைந்து மத்திய அரசு இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

சமண துறவியான ஆச்சார்யா வித்யானந்த் மஹராஜின் நூற்றாண்டு விழா ஓர் ஆண்டு கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் இன்றைய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆச்சார்யா வித்யானந்த் ஆன்மிக தலைவராக மட்டுமல்லாமல், சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தவர்.

அவரது நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதன் மூலம் நாடு முழுவதும் கலாச்சாரம், இலக்கியம், கல்வி மற்றும் ஆன்மிக துறைகளில் இவரது பங்களிப்பை மக்களிடம் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

சீனாவுடனான எல்லைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண இந்தியா விரும்புவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சீனாவில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்ற திரு. ராஜ்நாத் சிங், சீன பாதுகாப்புத்துறை அமைச்சர் அட்மிரல் **Dong Jun**-ஐ சந்தித்துப் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

இருதரப்பு விவகாரங்கள் குறித்து இருவரும் விவாதித்தனர்.

2020ஆம் ஆண்டு எல்லையில் நடைபெற்ற மோதலுக்குப் பிறகு இரு நாடுகளுக்கு இடையே உருவாக்கப்பட்ட நம்பிக்கையை வலுப்படுத்துவது குறித்தும் இருவரும் விவாதித்தனர்.

இந்தியா – சீனா எல்லையில் அமைதியை பேணுவதற்கு நிரந்தர ஏற்பாடு மற்றும் பதற்றத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகஇருவரும் விவாதித்ததாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, குஜராத் மாநிலம் காந்திநகரில் உள்ள தகவல் மற்றும் நூலக வலையமைப்பு மையத்தை நேற்று பார்வையிட்டார்.

தனது பயணத்தின்போது நூலகங்களின் மேம்பாட்டை ஆய்வு செய்த அவர், பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதப்பதிவில், **Inflib Net** நூலகங்களை அதிநவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைத்து மேம்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக கூறினார்.

புத்தக ஆர்வலர்கள் தங்களுக்குப் பிடித்தமான புத்தகங்களை எளிதில் அணுகும் வகையில் இந்தப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக நூலகங்களில் உள்ள புத்தகங்களை எளிதாக படிக்கும் வகையிலான செயலி ஒன்றையும் திரு. அமித் ஷா தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் அமைந்துள்ள கிஷன் கங்கா மற்றும் **Ratle** நீர்மின் திட்டங்கள் தொடர்பாக நடுவர் மன்றும் வழங்கிய தீர்ப்பை இந்தியா நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசு விடுத்துள்ள ஒரு அறிக்கையில், 1960ஆம் ஆண்டு சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின்கீழ் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் சட்டவிரோத நடுவர் நீதிமன்றம் வழங்கிய துணை தீர்ப்பை வெளியுறவு அமைச்சகம் நிராகரித்துள்ளதாக கூறியுள்ளது.

இந்த நடுவர் மன்றத்தின் சட்டப்பூர்வ செல்லுபடியை இந்தியா ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை என்றும் அமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

அந்த நடுவர் மன்றத்தின் நடவடிக்கைகள் சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின் மீதான கடுமையான விதிமீறலாக இந்தியா கருதுவதாகவும், எனவேதான் இந்த மன்றத்தின் ஒவ்வொரு நடவடிக்கையையும் சட்டவிரோதமானது என்று இந்தியா முடிவு செய்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்திற்குப் பிறகு சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் ஆதரிப்பதை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக இந்தியா கூறியுள்ளது.

இந்த விஷயத்தில் இந்தியாவின் இறையாண்மை முடிவை கேள்வி கேட்க எந்தவொரு நடுவர் மன்றத்திற்கும் அதிகாரம் இல்லை என்பதையும் இந்தியா தெளிவுபடுத்தியுள்ளது.

<<<<>>>>

இலங்கையின் மிகப்பெரிய கப்பல் கட்டும் தளமான கொழும்பு கப்பல் கட்டும் தளத்தின் 51 சதவீத பங்குகளை மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான **Mazagon Dock** கப்பல் கட்டும் நிறுவனம் பங்குகளை கையகப்படுத்த உள்ளது.

53 மில்லியன் டாலர் ஒப்பந்தத்தின்கீழ் இந்தப் பங்குகள் கையகப்படுத்தப்பட உள்ளன.

**Mazagon** கப்பல் கட்டும் நிறுவனத்தின் இந்த முடிவு சர்வதேச அளவிலான வர்த்தக வாய்ப்புகளை கைப்பற்றும் முயற்சியாக கருதப்படுகிறது.

<<<<>>>>

கொல்கத்தாவில் சட்டக் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாக கூறப்படும் சம்பவம் குறித்து தேசிய மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்துள்ளது.

கல்லூரி வளாகத்திற்குள்ளேயே நடைபெற்றுள்ள இந்த சம்பவம் குறித்து அந்த ஆணையம் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து 3 நாட்களுக்குள் விரிவான நடவடிக்கை அறிக்யையை வழங்குமாறு கொல்கத்தா மாநகர காவல்துறை ஆணையருக்கு ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

முன்னதாக இந்த சம்பவம் தொடர்பாக 3 மாணவர்களை கொல்கத்தா காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

<<<<>>>>

பீஹார் மாநில சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தேர்தல் ஆணைய அதிகாரிகள் நேற்று மாவட்ட அளவிலான அதிகாரிகளுடன் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு மாவட்ட அளவில் உள்ள கட்டமைப்பு ஏற்பாடுகளை அவர்கள் ஆய்வு செய்தனர்.

இந்தக் கூட்டத்தில் வாக்குச்சாவடி அளவிலான அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வாக்காளர்களின் குறைகளை தீர்ப்பதற்கு தேர்தல் ஆணையத்தின் செயலியை பயன்படுத்துமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

வாக்குச்சாவடி அளவிலான அதிகாரிகளை அழைத்து அவர்களிடம் நேரடியாக உரையாடுவதற்கான வசதி தேர்தல் ஆணையத்தின் **ECI – NET** செயலியில் புதிய வசதி செய்து தரப்பட்டுள்ளதாக துணை தேர்தல் ஆணையர் மணீஷ் கார்க் கூறினார்.

<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய அரசின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை பிரதமர் அலுவலகத்தில் இருந்து வருகை தந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நேற்று ஆய்வு செய்தனர்.

தனுஷ்கோடி, குந்துக்கல், பாம்பன் உள்ளிட்ட பகுதிகளில் மீன்பிடி துறைமுகங்களை ஆய்வு செய்து மீனவர்களிடம் அவர்கள் குறைகளைக் கேட்டறிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

நேட்டோ விரிவாக்கம் தொடர்பாக மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு அளித்த உறுதிமொழியை மீறிவிட்டதாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் குற்றம் சாட்டியுள்ளார்.

பெலாரசில் உள்ள மின்ஸ்க் நகரில் நடைபெறும் ஐரோப்பிய – ஆசிய பொருளாதார மண்டலத்தின் உச்சிமாநாட்டின்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், யுக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதிலும், நேட்டோ விரிவாக்கம் தொடர்பாகவும் மேற்கத்திய நாடுகள் நேர்மையாக நடந்துகொள்ளவில்லை என்று கூறினார்.

யுக்ரைனை, ரஷ்யா ஆக்கிரமிக்க முயல்வதாக நேட்டோ நாடுகளின் குற்றச்சாட்டை நிராகரித்த திரு. புடின், ஐரோப்பிய நாடுகள்தான் தொடர்ந்து பாதுகாப்புத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளதாக கூறினார்.

ரஷ்யா உடனான விவகாரங்களில் மேற்கத்திய நாடுகள் ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்வதை இனியும் அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கு எதிராக செயல்படும் பிரிவினைவாத மற்றும் தீவிரவாத இயக்கங்களை நேட்டோ நாடுகள் ஆதரித்து வருவதாகவும் திரு. புடின் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

ஆசிய ஸ்நூக்கர் குழு சாம்பியன் போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற போட்டியில் இந்தியா 3-0 என்ற கணக்கில் கத்தார் அணியை வென்றது.

பலமுறை உலக சாம்பியன் பட்டத்தை வென்ற இந்தியாவின் பங்கஜ் அத்வானி ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் முன்னாள் உலக சாம்பியனான, கத்தாரின் **Ali Al Obaidli**-யை 62-24 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தினார்.

மற்றொரு இந்திய முன்னணி வீரரான ஆதித்யா மேத்தா, 115-5 என்ற புள்ளிக் கணக்கில் பஷர் அப்துல் மஜீதை தோற்கடித்தார்.

இரட்டையர் பிரிவில் அத்வானி – பிரிஜேஷ் தமானி இணை, **Ali Al Obaidli** – மஜீத் இணையை 22-5 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது.

------------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

Hove நகரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி 42 புள்ளி 2 ஓவரில் 174 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

175 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடி இந்தியா, 24 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 178 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

வைபவ் சூரியவன்ஷி 48 ரன்னும், **Abhigyan Kundu** 45 ரன்னும் எடுத்தனர்.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று திண்டுக்கல்லில் நடைபெற ஆட்டத்தில் சேப்பாக் அணி – மதுரை அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இன்று மாலை மணி 3.15க்கு தொடங்க உள்ளது.

இரவு மணி 7.15க்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் கோவை அணி – சேலம் அணியை எதிர்கொள்கிறது.

------------

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

இந்தப் போட்டி நாட்டிங்ஹாமில் இந்திய நேரப்படி இன்றிரவு 7 மணிக்கு தொடங்க உள்ளது.